**செய்தி வெளியீடு எண்: 362** **நாள்: 05.06.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்ட காஜிக்கள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு ஆற்றி வரும் சமூகப் பணிகளை கருத்தில் கொண்டு 1.3.2016 முதல் மாதந்தோறும் 20,000 ரூபாய் மதிப்பூதியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 மாவட்ட காஜிக்களுக்கு நிலுவைத் தொகையுடன் சேர்த்து மொத்தம் 29 லட்சத்து 62 ஆயிரத்து 143 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

காஜி சட்டம், 1880 பிரிவு 2–ன் கீழ் மாவட்ட காஜிக்களை தமிழ்நாடு அரசு நியமனம் செய்து வருகிறது. மாவட்ட காஜிக்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் இஸ்லாமிய திருமணங்களை பதிவு செய்து சான்றிதழ் வழங்குவது, இஸ்லாமிய விழாக்கள் மற்றும் கிரியைகளை முன்னின்று நடத்துவது, ஷரியத் சட்ட ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளை இஸ்லாமிய சமூகத்தினருக்கு செய்து வருகின்றனர்.

மாவட்ட காஜிக்கள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு ஆற்றி வரும் சமூகப் பணியினை கருத்தில் கொண்டும், அவர்கள் அப்பணியினை எவ்வித குந்தகமின்றி தொடர்ந்திடும் வகையிலும், அவர்களால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பாதுகாப்பு, பணி நிமித்தமான அஞ்சலக மற்றும் போக்குவரத்து செலவுகளை கருத்தில் கொண்டும், மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் 20,000 ரூபாய் மதிப்பூதியம் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 1.3.2016 அன்று அரசாணை வெளியிட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு 1 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்து 6.3.2018 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், மாவட்டக் காஜிக்களுக்கு 1.3.2016 முதல் மாதந்தோறும் 20,000 ரூபாய் மதிப்பூதியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 மாவட்ட காஜிக்களுக்கு நிலுவைத் தொகையுடன் சேர்த்து மொத்தம் 29 லட்சத்து 62 ஆயிரத்து 143 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் தலைவர் திரு.அன்வர் ராஜா, எம்.பி., தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப., தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் டேரேஸ் அஹமது, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**
**நாள்: 5.6.2018**